Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 26 09 - 06 - 94 வியாழக்கிழமை ஓசை 111

## ஆங்கில மருந்து விற்பனைக்கு பழைய நடைமுறைகள் அமுல்

யாழ்குடா நாட்டுக்குள் கொண்டுவரப்படும் சகல ஆங்கில மருந்துப் பொருள்களும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உணவு மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி பார்வையிட்டு அவரது சிபார்சின்பின் அரசாங்க அதிபரின் அனுமதியுடனேயே விற்பனை செய்யப்பட உள்ளது. மேற்படி நடவடிக்கை தொடர்பாக சகல ஆங்கில மருந்து மொத்த விற்பனையாளர்களையும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று சந்தித்த உணவு மருந்து கட்டுப்பாட்டதிகாரி இதுபற்றிய விளக்கத்தை அவர்களுக்கு கொடுத்தார். இதேவேளை மொத்த விற்பனை (6ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சுக்கு குழந்தை, பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் குருநகர் மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று நடாத்திய எறிகணை வீச்சுக்கு கைக்குழந்தையும் தாயும் காயமடைந்தனர். வீடும் சேதமடைந்தது.

யாழ் நகர் வான்பரப்பில் புக்காரா குண்டுவீச்சு விமானம் வட்டமிட்டு சென்றவுடன் சுமார் 12மணியளவில் இந்த எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத் தாக்குதலால் மேரிகிறிஸ்ரினா (செல்வி) (வயது 24) என்ப (6 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரமாக கருத்துத் தெரிவிக்க அமைச்சர்களுக்கு தடைவிதிப்பு

(சொழும்பு)

தமது கருத்துக்களை பத்திரிகைகளுக்கு வழங்குவதை அமைச்சர்கள் கைவிட்டுவிட வேண்டும் என உயர்மட்டத்தினால் கேட்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் தமது பொறுப்புக்களின் கீழ் இல்லாத விடயங்கள் தொடர்பாக வெகுஜனதொடர்பு சாதனங்களுக்கு கருத்து தெரிவிக்கத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைகளில் வெளியான சில விடயங்கள் தொடர்பாக அரச மேல்மட்டகூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டதை தொடர்ந்து இது சம்பந்தமான பணிப்புரை விடுக்கப்பட்டது எதிர்க்கட்சியினர் அரசை கடுமையாக விமர்சித்துவரும் இவ் வேளையில் அரசை விமர்சிக்கும் வகையில் ஆளும்கட்சியினரும் இவ்வாறு கருத்துகளை வெளியிடுவது குறித்து இந்த உயர்மட்டக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## யுத்தத்திற்கான நிதியை கிரமமாக செலவிடுகிறோம்

**- விமல் விக்கிரமசிங்கா**

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதி யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை அரசு கிரமமான முறையில் செலவிட்டு வருவதாக பாராளுமன்ற விவகார அமைச்சர்விமல் விக்கிரமசிங்கா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடற்படை, விமானப்படை சட்டங்கள்கிழான பிரமாணங்களைநிறைவேற்றுவதுதொடர்பான பிரேரணை மீது அவர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டின் மொத்த வருமானத்தில் 5சதவீதம் வடக்கு-கிழக்கு போரிற்காக செலவிடப்படுகிறது. வடக்கு- (6 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட காமினி தொண்டமானுடன் இணைந்து சதித்திட்டம்

## காமினி விஜேசேகரவுக்கு விசேட பாதுகாப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் புதிய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரவுக்கு விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

புதிய பாதுகாப்பு ஒழுங்கிற்கு முப்பது பேர் அடங்கிய பொலிஸ் குழுவொன்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் இருவரும் சாஜன்கள் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை இவரின் பன்னிப்பிட்டிய வைத்தியசாலைக்கு பாதுகாப்பின் நிமித்தம் பல பொலிசார் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## சபாநாயகர் அறையில்

## றோ அமைப்பு பின்னணியில் என்கிறது சிங்கள வார இதழ்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் காமினி திசாநாயக்கா போட்டியிடுவதற்கு திரை மறைவில் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில்

வடமராட்சிப் பகுதியில்

## மதிய நேரத்திற்கு பின் பாடசாலை செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பாடசாலைகள் சில மதிய நேரத்திற்குப் பின்னர் செயலிழந்து காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

யாழ். கல்வித்திணைக்களம் வடக்கு வலயம் நடைமுறைப் படுத்திய இருநேரப் பாடசா

மாணவர்கள் நண்பகல் 12.30 ற்குப் பின் பாடசாலைகளுக்குச் சமுகமளிப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மாணவர்களும் தமது கல்வியை நண்பகலுடன் நிறுத்திவிட்டு தத்தமது வீடுகளுக்குச் சென்று

## சபாநாயகர் அறையில் காமினி நடத்திய மாநாடு

### எதிர்க்கட்சி கண்டனம்

[கொழும்பு]

எனது அனுமதியின்றி பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் பத்திரிகையாளர் மாநாடு நடாத்துவதற்கு இடம்கொடுக்க மாட்டேன் என சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராக காமினி திசாநாயக்கா பதவிப் பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாடு தொடர்பாக எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ரிச்சட்பதிரன சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து சபாநாயகர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்; தான் இல்லாத வேளை செயலாளர் இவ் அனுமதியை வழங்கி இருப்பதாகவும் எனவே இனிமேல் இவ்வாறான நடவடிக்கை எதுவும் நடைபெறாமல் தான் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார்.

## பொ. ஐ. மு. செயலாளரை பதவி நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் தி. மு. ஜயரட்னாவை அப்பதவியில் இருந்து நீக்கி ரிச்சட் பதிரனவுக்குஅப்பதவியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரியவந்துளது.

இதனைத்தொடர்ந்து மேற்படி முன்னணியில் குழப்பம் நிலவுவதாக தெரியவருகிறது.

## மேலும் மனிதப் புதைகுழி ராஜகிரியவில் கண்டுபிடிப்பு?

(கொழும்பு)

கொழும்பு ராஜகிரியவில் வீடமைப்புத் திட்டம் ஒன்றுக்காக நிலத்தைத் தோண்டும் போது அங்கிருந்து மனித எலும்புக் கூடு, தலைமயிர், உடுபுடைவைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து அப்பகுதியில் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விடத்தில் காணப்பட்ட மலசல கூடத்தின் குழிப்பகுதியை தோண்டிய போதே இவ்வாறு எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன கூரேயினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்படவுள்ளஇவ்இடத்தில் முன்னர் விசேட அதிரடிப் படையினர் முகாமிட்டிருந்ததாக தெரியவந்துள்ளது

காமினி திசாநாயக்கா போட்டியிடுவதற்கு திரை மறைவில் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் காமினி திசாநாயக்காவிற்குப் பக்கபலமாக அமைச்சர் தொண்டமான் இருப்பதாகவும், இவர்கள் இருவரும் இந்தியப் புலனாய்வுத் துறையான 'றோ'வின் வழி நடத்தலில் செயற்படுவதாகவும் சிங்கள வார இதழ் ஒன்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை இப்போதுகாமினி திசாநாயக்காவே வழிநடத்தி வருவதாகவும் டி. பி. விஜேதுங்கா கட்சியை வழிநடத்துவதிலிருந்து சற்று ஒதுங்கியுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் கூறுகின்றது.

இப்பத்திரிகையில் மேலும் சிறிலங்காவின் அரசியலைத் தீர்மானிக்கும் பொறுப்பை இந்தியாவின் றோ அமைப்பு தற்போது காமினி திசாநாயக்காவிடமும் தொண்டமானிடமும் வழங்கியுள்ளது.

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக காமினி திசாநாயக்காவைநியமிப்பதற்கு ஆதரவாகதொண்டமான் தலைமையிலான இ. தொ. கா. செயற்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு சென்ற காமினி, ஐ. தே. கவின்செயற்குழுவிற்குள் புகுந்து கொண்டு ஜனாதிபதி வேட்பாளர் என்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் குண்டு வெடிப்பை நடத்த விடுதலைப் புலிகள் முயற்சி?

(கொழும்பு)

பொலிசார் உட்பட பாதுகாப்புப்படையினர் தற்போது பாதாள உலக கிரிமினல்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு வரும் போது கொழும்பில் குண்டுத் தாக்குதல் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர்என பாதுகாப்பு அமைச்சுக்கு இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளதாக ''லக்திவ'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு நகரில் பாதாள உலக கிரிமினல் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் இந்த நேரத்தைப் பயன்படுத்தி குண்டுத் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் அண்மையில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் கொடுத்த தகவல்கள் மூலம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கு எதிராக தமிழர் அமைப்பு வெள்ளை மாளிகைமுன் ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)

இந்தியாவிலிருந்து அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை முன் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அண்மையில் அமெரிக்கா சென்ற இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக இலங்கைத் தமிழர் இவ்வார்ப்பாட்டத்தை நடத்தினர்.

வெள்ளை மாளிகையின் முன்பாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தை அமெரிக்காவில் உள்ள உலக தமிழர் ஒருங்கமைப்புக் குழுவும் கனடாவிலுள்ள கனேடிய தமிழர் கூட்டமைப்பும் ஒழுங்கு செய்தன. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐந்தம்சக் கோரிக்கை கொண்ட மகஜர் ஒன்று அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனிடம் ஒப்படைக்கப்பட்டது.

தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து பலவந்தமாக நாடு கடத்துவதை தடுக்க அமெரிக்க ஜனாதிபதி தமது செல்வாக்கை பயன்படுத்தவேண்டும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு வலயம் நடைமுறைப் படுத்திய இருநேரப் பாடசாலைத்திட்டத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் நோக்குடனேயே பகலுடன் நிறுத்திவிட்டு தத் தமது வீடுகளுக்குச் சென்றுவிடுவதாகவும் இதனால் மேற்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## சைக்கிள் - வான் விபத்து மூவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற சைக்கிள் - வான் விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

சம்பவதினம் இரவு 7.30 மணியளவில் பிரதான வீதியால் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது குறுக்கு வீதியால் வந்த வான் மோதியதால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தந்தையும் இரு பிள்ளைகளும் தூக்கி வீசப்பட்டனர்.

படுகாயமடைந்த சரசாலை மத்தியைச் சேர்ந்த சண்முகதாஸ் (வயது47) இவரது பிள்ளைகளான செந்தூரன் (வயது 15), ஆரூரன் (வயது 13)ஆகியோர் சிகிச்சைக்காகயாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அதிகரித்த செலவிற்கும் எமக்கும் தொடர்பில்லை

### விமானப்படைத் தளபதி கூறுகிறார்

(கொழும்பு)

விமானப்படையின் அதிகரித்துச் செல்லும் செலவினத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும்இல்லை எனவும் இது தொடர்பாக தான் மிகுந்த கவலை அடைந்துள்ளதாகவும் விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

புதிதாக விமானங்கள் கொள்வனவு செய்வது அநாவசியமான செலவு என்றும், விமானப்படைக்கான செலவீனங்கள் அதிகரிப்பது குறித்து வெளிவந்த செய்திகள் குறித்தும் கருத்துகளைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாறான செலவீன அதிகரிப்பும், கொள்வனவு ஒப்பந்தங்களும் தமதுபதவிக்காலத்திற்கு முன்பே ஏற்பட்டு விட்டதாகதான் தெளிவுபடுத்த விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் தளபதி ஒருவர் மேற்கொண்ட முடிவுகளைத் தான் மாற்றுவது அவ்வளவு ஏற்றதல்ல என்றும் அவர் கூறினார், புதிய சீருடைகளைப் பெறுவதில் விமானப் படையினர் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் புதிதாக கைப்பட்டி அறிமுகம் செய்யப்பட்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# வரி விளம்பரம்

**சலனம்**

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

**சாரதா**

கலை இலக்கிய சஞ்சிகை. அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8472)

**துளிர்**

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன்தரக் கூடியது. (8474)

**வாகனங்கள் விற்பனை**

ஒஸ்ரின் எல்.டி. வான் -30 அந்தர், கேம்பிரிட்ஜ் டிலிவரி வான் 10 அந்தர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு - மில்க்வைற் (சி-9621)

**புலமைப் பரிசில் வகுப்பு**

ஆண்டு 5 புலமைப் பரிசில் சனி, ஞாயிறு துரித மீட்டல் வகுப்புகள் 11. 06. 94 சனி மு. ப. 9. 00, பி. ப. 2. 00 மணி ஆரம்பமாகும், மாதிரிப் பயிற்சிப் பரீட்சையும் நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (8509)

## ஆங்கில தினம்

யாழ்/ இளையதம்பி இந்து வித்தியாலயத்தில்இன்று9-00 மணிக்கு ஆங்கில தினவிழா அதிபர் தலைமையில் நடைபெறும். இதற்கு பிரதம விருந்தினராக ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. அருமைநாயகம் அவர்கள் கலந்து கொள்வார்.

## கோழிகளுக்கு தூக்கநோய்

(தொல்புரம்)

வலிமேற்குப் பகுதிகளின் சில இடங்களில் கோழிகளுக்குத் தூக்கநோய் ஏற்பட்டுள்ளது.

தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டை உட்படமற்றும்

# 137 தமிழ்க் குடும்பங்களை உடன் வெளியேறப் பணிப்பு

## - மாத்தளை பொலிசார் எச்சரிக்கை

(கொழும்பு)

மாத்தளை விஞ்ஞானக் கல்லூரிக்கு அருகேயுள்ள நான்கரை ஏக்கர் நிலத்தில் குடியேறியிருந்த 137 தமிழ்க் குடும்பங்களையும் உடனடியாக அங்கிருந்து வெளியேறும்படி பொலிசார் கடுமையான உத்தரவு பிறப்பித்துஉள்ளனர்.

கடந்த 31-ம் திகதியன்று இக் குடியேற்றப் பகுதிக்கு சென்ற பொலிசார் மறுநாள் மாலைக்கு முன்பாக வெளியேறி விட வேண்டுமெனவும், அவ்வாறு செய்யாவிட்டால் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்களெனவும் எச்சரிக்கை செய்தனர்,

இதனையடுத்து அக் குடியேற்றவாசிகள் மாநகர துணை முதல்வர் சிவஞானத்திடம் சென்று முறையிட்டனர். பின் அவரது அறிவுறுத்தலின் பேரில் 67 குடும்பத் தலைவர்கள் பொலிசாரிடம் சென்று பேசியதையடுத்து 13 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இப் 13 பேரும் காணியை விட்டு வெளியேற முடியாது எனப் பொலிசாருக்கு திட்டவட்டமாக தெரிவித்தனராம்.

எனினும் பின்னர் காணிகளை விட்டு வெளியேறுவதாகக் கூறியதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டனர்.

இக் காணியில்குடியேறியிருந்தவர்கள் தமக்கு இக் காணியைப் பகிர்ந்தளிக்கும்படி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் பிரதேச செயலக போசாக்கு வார நிகழ்ச்சி

1994 ஜூன் 06ஆம் திகதி தொடக்கம் 1994 ஜூன் 12ஆம் திகதி வரை நல்லூர் பிரதேச போசாக்கு இணைப்புக் குழுவினால் போசாக்கு வார நிகழ்ச்சிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

கொக்குவில், கோண்டாவில், அரியாலைப் பகுதியிலுள்ள பதினான்கு சனசமூக நிலையங்களில் போசாக்குப் பற்றிய கலந்துரையாடலும் இலைக்கஞ்சி சத்துணவைத் தயாரித்தலும் தொடர்பான செய்முறைகளும் இரண்டு நாட்கள் நடைபெறும். நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான போசாக்குபற்றியகருத்தரங்குநாளை வெள்ளி யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் சமுதாய மருத்துவத் துறையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட சில கிராம அலுவலர் பிரிவுகளில் சுகாதாரமும் போசாக்கும் பற்றிய வீடியோ திரைப்படக் காட்சியும், போசாக்கு தொடர்பான கண்காட்சியும் நடாத்தப்பட உள்ளது. மேலும் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட போசாக்கு பற்றிய பிரசுரமொன்று நல்லூர் பிரதேச சபையின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படவுள்ளதாகவும், நல்லூர் பிரதேச செயலரும், போசாக்கு இணைப்புக்குழுத் தலைவருமாகிய திருமதி க. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

### சுற்றுப்போட்டிகள்

(தொல்புரம்)

சுழிபுரம் மேற்கு ஸ்ரீகணேச சனசமூக நிலையததின் 65 ஆம் ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் சுற்றுப் போட்டிகளை மேற்படி சன சமூக நிலையத்தினர் நடாத்தவுள்ளனர்.

மேற்படி சுற்றுப்போட்டிகளின் போது முதல் கட்டமாகமென்பந்து கிரிக்கட், கரபந்தாட்டம், கரம்போட் ஆட்டம் போன்றவைகள் இடம் பெறவுள்ளன. இப் போட்டிகளுக்கான மேலதிக விபரங்களை அறிய நிலைய நிர்வாகிகளிடம் தொடர்பு கொள்ளுமாறு நிலையச்செயலாளர் வே. வேல்மகிபன் தெரிவித்துள்ளார் (41)

### கருத்தரங்கும் இலைக்கஞ்சி அறிமுகமும்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலகத்தினால் நடாத்திவரப்படும் போசாக்கு வாரத்தினையொட்டி கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

மேற்படி போசாக்கு சம்பந்தமான தொடர் கருத்தரங்குகளில் இன்று முற்பகல் 10.00 மணியளவில் வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும் பிற்பகல் 2.00 மணிக்கு சங்கானை

### சுகாதாரவார நிறைவும் கண்காட்சியும்

(தொல்புரம்)

## வேலைத்தளம் நிறுவப்பட்டது

(குருநகர்)

உடுவில் 'ஆக்' உடல் வளர்ச்சி குன்றிய சிறுவர் இல்லத்திற்கு யாழ் - மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் வேலைத்தளம், பொது மண்டபம் ஆகியவற்றை நிறுவிக் கொடுத்துள்ளது.

கடந்த 4 - ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் வண - எஸ். எச். ஜெபநேசன் அடிகள் மேற்படி நிலையங்களை சம்பிரதாய பூர்வமாகதிறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றன. (21)

தோட்ட தொழிலாளர்களின்

## இரண்டாயிரம் வாழைகளை வெட்டிச் சாய்த்த நிர்வாகம்

மெல்சிரிபுர பகுதியில் உள்ள மில்லவான தோட்டத்தில் தொழிலாளர்களால் பயிரிடப்பட்டிருந்த சுமார் இரண்டாயிரம் வாழை மரங்களை தோட்ட நிர்வாகம் வெட்டி அழித்துள்ளதாகப் புகாரிடப்பட்டுள்ளது.

கடந்த 35 வருடங்களாக மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த 19 தொழிலாளர்கள் இவ் விடங்களில் வாழையைப் பயிரிட்டு வந்தனர்.

இம் மரங்களை அகற்றும் படி கடந்தமாத ஆரம்பத்தில் தோட்ட நிர்வாகம் கூறியிருந்தது. தொழிலாளர்கள் இது பற்றி மாவட்ட செயலகங்களுக்கு முறையிட்டிருந்தனர்.

பின்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இவ் வாழைமரங்களை வெட்டுவதில்லை என நிர்வாகமும் இணங்கியிருந்தது.

ஆனால் இவ் வாழைமரங்களை தோட்ட நிர்வாகம் திடீரென வெட்டித் தள்ளிவிட்டது.

இதனையடுத்து இச் சம்பவம் குறித்து பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளதுடன் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

வீட்டுப் பணிப்பெண்ணை

## துன்புறுத்தியவருக்கு தண்டனை விதிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவில் வீட்டுப் பணிப்பெண்ணாக கடமையாற்றிய இலங்கைப் பணிப்பெண் ஒருவரைக் கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் குவைத் நாட்டவர் ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் சிறைத்தண்டனையும், அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்தவரான வசந்தாகெதர என்னும் பணிப்பெண்ணை மாடி வீட்டிலிருந்து எங்கும் போக விடாமல் தடுத்து வைக்கப்பட்டதாகவும், ஒரு நாளைக்கு ஒரு துண்டு பாண் மட்டுமே உண்ணக் கொடுத்து துன்புறுத்தியதாகவும் நீதிமன்றத்தில் புகார் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி 13415 அமெரிக்க டாலர் அபராதமும் ஒருவருட சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
கேள்வி

## வருடாந்த மாநாடு ஐ.ஐ.தே.மு. ஒத்திவைப்பு

ஜனநாயகஐக்கியதேசியமுன்னணியின் வருடாந்தமாநாடு பிற்போடப்பட்டுள்ளது. இம் மாநாடு எதிர்வரும் 18 ஆம் திகதியன்று நடைபெற இருந்தது குறிப்பிடத்தக்கது.

வருடாந்த மாநாட்டுக்கான தீர்மானங்களை உறுப்பினர்கள் அனுப்பி வைப்பதற்கு வசதியாகவே மாநாடு பிற்போடப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் முன்னணி எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பாக வருடாந்த மாநாட்டிலேயே முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்... 09.06.1994

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் பன்னாலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ் - புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**கலீல்** (இரத்தினசிங்கம் கலியுகன் - ஈவினை, புன்னாலைக்கட்டுவன் - யாழ்)

**வினோதன்** (மார்க்கண்டு பத்மராசா - குப்பிளான், ஏழாலை - யாழ்)

1989ஆம் ஆண்டு புங்குடுதீவில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**இ. சதாசிவம்**

யாழ் - மத்தியூஸ் வீதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (பருத்தித்துறை) எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப்பிரிந்த,

**லெப். ரவி** (சபாபதி தயாபரன் - மட்டுநகர்)

**2-ம் லெப். சோசின்** (சதாசிவம் நடராசா- மட்டுநகர்)

**லெப். ரமணன்** (பாண்டியன் சுந்தரதாஸ்- திருமலை)

**லெப். கேணல் டேவிற்** (கிறிஸ்தோப்பர் அன்ரனி மரியதாஸ் - பொலிகண்டி-வல்வெட்டித்துறை-யாழ்)

**லெப். கரிகாலன்** (சிதம்பரப்பிள்ளை சுரேஸ்- வரணி வடக்கு, கொடிகாமம் - யாழ்)

**2-ம் லெப். மாணிக்கம்** (சண்முகநாதன் கஜேந்திரன் - கலட்டி, வட்டுக்கோட்டை)

**புலவர்** (சிறிஆனந்தகுரு சியாமளன் - உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட களுவங்கேணி 2ஐச் சேர்ந்த சிறுவன், இளைஞன் ஆகிய 02 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு திருமலை - மூதூர், அரிப்புச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் வெற்றிச்செல்வன்-கெரில்லா** (அழகையா கோமேஸ்வரன் - மூதூர் - திருமலை)

**லெப். மலைமான்-நந்தி** (தேவதாசன் கங்காதரன் - சாம்பல்தீவு - திருமலை)

**லெப். தர்மராஜ்** (ஜோசப் அன்ரனி அலெக்ஸாண்டர் - மின்சாரநிலைய வீதி - திருமலை)

**2-ம் லெப். மறைமலை-விவேகன்** (இராயப்பு

ளது.

தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டை உட்படமற்றும் சில இடங்களில் கோழிகளுக்குத் தூக்கநோய் கண்டுள்ளதனால் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள கிராமவாசிகள் கவலை தெரிவித்தனர். சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கையாக கோழிவளர்ப்பில் ஈடுபட்டிருந்த பல குடும்பங்களுக்கு நஷ்டம் ஏற்படும் நிலை தென்படுகிறது. இந்நோயினைத் தடுப்பதற்கான வழிகளை ஏற்படுத்தும் முகமாக கால்நடை வைத்தியப் பகுதியை மக்கள் நாடியிருப்பதாகத் தெரியவருகிறது. (41)

UNIVERSITY OF JAFFNA

POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Second Semestar Examination for Postgraduate Diploma in Public Administration will commence on 5th July 1994. Candidates could collect their admission cards from SAR/Academic after payment of all dues Students should submit their Field Reports on or before 30 july 94.

Registrar.

(சி-9623)

## நிறைவும் கண்காட்சியும்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் போசாக்கு வார நிகழ்வையொட்டி கண்காட்சியும், நிறைவுநாள் விழாவும் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி அன்று காலை போசாக்கு வாரக் கண்காட்சியும், 12ஆம் திகதி பிற்பகல் 1.00 மணி முதல் நிறைவுநாள் விழாவும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும்.

மேற்படி நிறைவு நாள் நிகழ்வின் போது சுகாதார சேவைகள்பிராந்தியபணிப்பாளரும், வைத்திய கலாநிதியுமான என். விவேகானந்தன் பிரதம விருந்தினராகவும், சங்கானை வட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. ந. மதி உட்பட மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (41)

... திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும் பிற்பகல் 2.00 மணிக்கு சங்கானை அமெரிக்க மிசன் பாடசாலையிலும் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு அராலிவள்ளியம்மை வித்தியாசாலையிலும், அத்தோடு இந்நிகழ்வின்போது போசாக்கின் அவசியத்தை தெளிவுபடுத்தும் முகமாக இலைக்கஞ்சி அறிமுகமும் இடம்பெறும் என வலிமேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா அவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது (41)

## ஐஸ் தொழிற்சாலை அநுராதபுரத்திற்கு மாற்ற முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வந்த மீன் பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஐஸ்கட்டித் தொழிற்சாலை அநுராதபுரத்திற்கு மாற்றப் படவுள்ளது. இது தொடர்பான பூர்வாங்க வேலைகளை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# குறுங்கால பயிர்செய்கைக்கு இலங்கை வங்கி கடனுதவி

இலங்கை வங்கி நடைமுறைப்படுத்திய விவசாயப் புனர்வாழ்வுக் கடன் திட்டத்தின் கீழ் சுன்னாகம் இலங்கை வங்கியால் இடைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 17 விவசாயிகளிற்கு குறுங்காலப் பயிர்ச் செய்கைக் கடனாகத் தலா 10,000ரூபா வீதம் அண்மையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பணியகத்தில் இடைக்காடு சன சமூக நிலையத் தலைவர் வி. சிவபாலன் தலைமையில் இடம்பெற்றது. இலங்கைவங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் திரு. எஸ். விக்னராஜா பிரதம விருந்தினராய்க் கலந்து கொண்டு கடன்களை வழங்கினார்.

புத்தூர் கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன், விவசாயப் போதனாசிரியர் எஸ். விஜயரட்ணம், இலங்கை வங்கி மாவட்ட கடன் அதிகாரி என். சச்சிதானந்தன், சுன்னாகம் இலங்கை வங்கி கடன் உத்தியோகத்தர் ந. சிவரத்தினம், அபிவிருத்தி உதவியாளர் பொ. பாலகுமார் ஆகியோரும் உரையாற்றினர்.

## மகா கும்பாபிஷேகம்

இருபாலை கிழக்கு கதிர்காமவேலாயுதர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

## கேள்வி

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் இசுசு லொறிக்கு பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விகளைச் சமர்ப்பிக்கவும்.

01. பொடி முழுமையாகத் திருத்தம் செய்தல்.

02. உருவுக்கு வாணிஷ் அடித்தல் (07 தரம்) இது சம்பந்தமான மேலதிக விபரங்களை சங்கத்தில் பார்வையிடலாம்.

சகல கேள்விகளும் பதிவுத் தபால் மூலம் 'கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்னும் விலாசத்துக்கு 14-06-94ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

-பொது முகாமையாளர்.

கரவெட்டி. (சி-9624)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

இடம்: நீர்வேலி முற்றவெளி மைதானம்
காலம்: 12-06-94 ஞாயிறு பி. ப. 2 மணி
போட்டி: A. B. C என மூன்று பிரிவுகளாக நடைபெறும்
பார்வையாளர் அன்பளிப்பு: ரூபா 10/-
நிர்வாகம்: ஐக்கிய விளையாட்டுக் கழகம், நீர்வேலி.

(8496)

## தேவை

வீடியோ டெக், தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற் செற் மற்றும் எலெக்றோனிக் பொருட்கள் தேவை. நல்ல விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகட்கு:

மின்வளம்
இல 81, லெப்.கேணல் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

(சி-9575)

**லெப். தர்மராஜ்** (ஜோசப் அன்ரனி அலெக்ஸாண்டர் - மின்சாரநிலைய வீதி - திருமலை)
**2-ம் லெப். மறைமலை-விவேகன்** (இராயப்பு அன்ரனி - ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)
**2-ம் லெப். மணிமொழி-ரங்கன்** (வல்லிபுரம் கமலதேவன் - திரியாய் - திருமலை)
**அறிவுநம்பி-குணா** (உருத்திரமூர்த்தி சிறிகாந்-சிவன்வீதி- திருமலை)
**திருவருட்செல்வன்-காளிதாஸ்** (வைரமுத்து கோணேஸ்வரன் - சாம்பல்தீவு - திருமலை)

மன்னார் - சிறுநாவற்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் ரவிசங்கர்** (யூலியஸ் வின்சன் கெனடி-புதிய வீட்டுத்திட்டம், சாவற்காடு - மன்னார்)
**லெப். அரவிந்தன்** (வேதநாயகம் பிரான்சிஸ் சேவியர் - 7-ம் வட்டாரம் - மன்னார்)
**மேஜர் கந்தன்** (நாகேந்திரம் பாலசுந்தரம்-தருணன்வீதி, ஆலங்கேணி-பூநகரி
**2-ம் லெப்.உதயச்சந்திரன்** (சேதுபாண்டித்தேவர் இராமமணிசேகரன் மகாதேவர்-திருநெல்வேலிமாவட்டம்-தமிழ்நாடு)

மணலாற்றுச்சமர் 08-06-92 அன்று விழுப்புண்ணடைந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய,

**லெப். வேந்தன்-கில்மன்** (வேலாயுதபிள்ளை வரதன்-வேளாவை, அளவெட்டி-யாழ்)

திருமலை-ஈச்சிலம்பற்றை, பூநகரிப்பகுதியில் சிங்கள ஊர்காவல்படையினரால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

மட்டு-போரதீவு-பொருகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1993-ம் ஆண்டு திருமலையில் 01-05-93 அன்று இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தகர்ப்பின்போது விழுப்புண்ணடைந்திருந்து யாழ். மருத்துவமனையிற் சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**லெப்.மிதுலன்-வேண்மா** (தம்பிராசா சுரேந்திரன்-வர்ணமேடு, தம்பலகமம்-திருமலை)

மட்டு-பெண்டுகள்சேனை-தட்டாவெளிப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப்.வாணி** (சண்முகம் தங்கராசா-சித்தாண்டி-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9620)

## மாஜி முதலமைச்சரிடம் கூட்டுத்தாபன வாகனங்கள்

(கொழும்பு)

தென் மாகாண சபை முன்னாள் முதலமைச்சரிடம் இன்னும் கூட்டுத்தாபன வாகனங்கள் இரண்டு இருப்பதாக தெரியவருகின்றது.

தென் மாகாண சபையின் தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட மேற்படி இரு வாகனங்களும் இன்னும் அவரின் வீட்டில் வைக்கப்பட்டுள்ளது என கூறப்படுகிறது.

# அரசியலமைப்பு மாற்றங்களே வட-கிழக்கு பிரச்சினை தீர உதவும்

**- திருமதி சிறிமாவோ**

(கொழும்பு)

அரசியலமைப்பில் செய்யப்படும் மாற்றங்களே வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவும். அவ்வாறு வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படும்போது மாகாண சபை அமைப்பு தேவையற்றதாகிவிடும். இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

சண்டே ஐலண்ட் இதழுக்கு பிரத்தியேக பேட்டி ஒன்றை அளித்து அதில் மேலும் கூறுகையில், வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக என்றே மாகாணசபை அறிமுகமாக்கப்பட்டது.

ஆனால் இப்போது அங்கே மாகாணசபை செயற்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

திருமதி சந்திரிகா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவராக்கப்பட்டதுஏன்என்றகேள்விக்கு அவர் பதிலளிக்கையில் மேல் மாகாணத்திலும், தென் மாகாணத்திலும் சந்திரிகா தமது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். அதன் காரணமாக அவர் இந்நியமனத்தைப் பெற்றார். அவரது நியமனத்தை எவரும் எதிர்க்கவும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதிதேர்தலுக்கான வேட்பாளர் யார்என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், முன்னணி தனது வேட்பாளராக என்னைத் தெரிவு செய்துள்ளது எனத் தெரிவித்தார்.

இவ் வேட்பாளர் தொடர்பாக திருமதி சந்திரிகாவிற்கும் உங்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், இது ஐ. தே க வினதும் ஐ. தே. க சார்பு சக்திகளதும் பொய்ப் பிரசாரமே அன்றி வேறில்லை. நான் போட்டியிடுவேன். தேர்தல் பிரசாரத்திற்கு திருமதி சந்திரிகா தலைமை தாங்குவார். சில சமயம் ஏதாவது காரணங்களுக்காக நான் போட்டியிடா விட்டால் திருமதி சந்திரிகா வேட்பாளர் ஆவார் எனத் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

இன்று வியாழக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் வடமராட்சிப் பகுதியில் உள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பிரிவினர் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடாத்தவுள்ளனர். எனவே தவறாது அனைத்து சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க நிர்வாகிகளும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கேட்டுள்ளது.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்.கரிகாலன்**

**(செல்வன் சிதம்பரப்பிள்ளை சுரேஷ்)**

பிறப்பு: 1971-10-09 — வீரச்சாவு: 1991-06-09

தரணியில் ஓர் நாடாய்த் தமிழீழம் தான்தோன்ற
தாக்கினர் எதிரிகளைத் தாவிடும் வேங்கைகள்
வரணியின் பங்கதனை வழங்கிடச் சுரேஷ் அவன்
வாவென் றழைக்குமுன் வரிப்புலி ஆகினான்
பரணிப்பா பாடிடும் பழந்தமிழ் வீரத்தை
பாக்கு நீரிணையிலே பாருக்குக் காட்டினான்
மரணித்தான் எங்கள்மண் மறக்குமோ உன்னைத்
-தான்
மாவீரன் நானென்று மார்தட்டும்-கரிகாலன்.

உமது ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்

வரணி வடக்கு,
வரணி.

பெற்றோர், சகோதரர்கள்

(5887)

## பணம்செலுத்தியேபொருள் கொள்வனவு செய்கிறோம்

**- யாழ். செயலக புனர்வாழ்வுப்பிரிவு**

(நமது நிருபர்)

இலவச உலர் உணவு நிவாரணத்தைத் தவிர்ந்த ஏனைய உணவுப் பொருட்களை தாம் கொள்வனவு செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிற்கு பணம் செலுத்த வேண்டியிருக்கிறது என யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளனர்.

இவ் உணவுப் பொருட்கள் சிலவேளைகளில் முற்பணம் செலுத்தப்படுவதாகவும் சில சமயம் கடன் அடிப்படையிலும் கொள்வனவு செய்யப்படுவதாகவும்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை யாழ்ப்பாண குடாநாட்டிற்கு இலவச உலர் உணவு நிவாரணத்திற்கென சுமார் 55 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அனுப்பப்படுவதாகவும் கூறப்படுகிறது.

(பா),(தி)

## கண்நோய் பரவுகிறது

குடாநாட்டில் பரவலாக கண்நோய் பரவிவருகிறது. சிறியவர் முதல் பெரியவர் வரை வயது வேறுபாடின்றி பல மக்கள் மத்தியில் தீவிரமாக பரவிவரும் இந்நோயினைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பகுதியினர் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

சமீப நாட்களாக பல பகுதிகளிலுமுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் இக் கண்நோய்க்கு மக்கள் சிகிச்சை பெற்று செல்வதை அவதானிக்க முடிந்தது.

(41)

## சுகாதார வார நிகழ்வுகள்

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு, இன்று கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் மாணவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன், அமரகலா சனசமூக நிலையத்தில் சூழல் பாதிப்பு, நோய்த் தடு

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



**லெப். வேந்தன்,கில்மன்**

(சாள்ஸ் அன்ரனி விசேட படைப்பிரிவு)

**(வேலாயுதபிள்ளை வரதன்)**

(பளை ம. வி. உயர்தர வகுப்பு பழைய மாணவன்)

| மகனாக | புலியாக | மாவீரனாக |
| --- | --- | --- |
| 24-11-70 | 29-09-88 | 09-06-92 |

எத்தனையோ திட்டங்கள் போட்டிருந்தோம்
எஞ்ஜினியர் எதிர்பார்ப்பில் நினைவளர்த்தோம்
பதினெட்டு வயதினிலே மண்ணை மீட்கப்
படைஅணியில் இணைந்து பலகளமே கண்டாய்
வித்தானாய் மணலாற்றுக் களத்தில் அன்றோ
விழிகலங்கி நிற்கின்றோம் விதியை நொந்து.

இல்லத்தில் ஏகமகன் உன்னை யன்றோ
ஈழத்தாய் விடுதலைக்காய் அர்ப்பணித்தோம்
கல்லறைக்குள் கனவுடனே நீயுறங்க
காயாத விழிகளுடன் வெளியே நாங்கள்
இல்லையடா மன உறக்கம் இந்த வாழ்வில்
உள்ளவரை உன்நினைவில் உருகி நிற்போம்.

பாசமிகு நினைவுடன்


வேளாவை,
அளவெட்டி.

அப்பா, அம்மா, அத்தான்,
அக்கா, குட்டிமருமகன்.

(8503)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்

10 - 06 - 1994



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி





வல்வெட்டித்துறையில் 11-05-1994 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## சண்முகம்பிள்ளை ஞானமூர்த்தி (J.P)

(இளைப்பாறிய தபால் திணைக்களப் பிரதேச பதில் அத்தியட்சகரும், சமாதான நீதவானும், முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரும், சமூகத் தொண்டனும்)


**தோற்றம்: 01-10-1905** **மறைவு: 11-05-1994**

உண்மையே உருவாகி உள்ளமே கோயிலாகி
வண்மையே பேசி அனைவர்க்கும் வழிகாட்டி
நின்றாய்
கண்ணியம் மிக்க தலைவருள் தலைவனாய்
திகழ்ந்தாய்
திண்ணிய மனத்துடன் போராடினாய்
தீயவைகளை அகற்றிட
பண்பே சிகரமாய் பார்வையிலே எளியனாய்
பலருக்கும் சேவை செய்தாய் வல்வை அறியும்
வள ஈழமும் அறியும்
என்பிலேயும் தமிழ் உணர்ச்சி பொங்கும் தமிழா
ஈழத்தமிழர் நலமுடன் வாழ ஏங்கி ஏங்கியே
ஒற்றுமை கூட்டினாய்.

அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியை 10-06-1994 வெள்ளிக்கிழமை காலையிலும், அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறை. (8499)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



## லெப். கேணல் டேவிற்
## (செல்வன் கிறிஸ்தோபர் அன்ரன் மரியதாஸ்)

**மலர்வு: 29 - 01 - 1966** **வீரச்சாவு: 09 - 06 - 1991**

எதிரியின் பலம் கடலில் பெரிதாயிருந்தாலென்ன?
பொருதி வென்றிடமுடியும் என பொங்கி எழுந்தவனே!
தங்கத்தமிழ் ஈழம் மலர உந்தன் பங்களிப்பாய்
ஏழு ஆண்டுகள் கடலில் பல வீரகாவியங்கள்
படைத்தவனே!
ஆக்கிரமிக்க வென்று ஆவேசத்தோடு வந்த
இந்தியப்படையை
கதிகலங்க வைத்தவனே!
சங்கத் தமிழ் மன்னர் கட்டிக்காத்த தமிழ்
சிங்களக் கொடியவரால் சிதிலமாவதைக் கண்டு
சீறி எழுந்தவனே!
எங்கள் நினைவுகளில் என்றும் நிலைத்தவனே!
தமிழரின் வீர வரலாற்றில் நீயும் ஓர் அத்தியாயம்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும், படகோட்டிகளுக்கும் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

09-06-94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் சக போராளிகளையும், நண்பர்களையும், உறவினர்களையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

**- குடும்பத்தினர்.**

பொலிகண்டி கிழக்கு. (8495)

ளாக்கப்படுவதுடன், அமரகலா சன சமூக நிலையத்தில் சூழல் பாதிப்பு, நோய்த் தடுப்பு பற்றிய கருத்தரங்கும், வேலணை துரைச்சாமி ம. வி. யில் உணவுச்சுகாதாரம் பற்றிய கருத்தரங்கும், றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் சூழலும் சுகாதாரமும் பற்றிய கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளது.

## திருட்டுபோன மாடு மீட்கப்பட்டது

களவாடப்பட்ட ஆறாயிரம் ரூபா பெறுமதியான மாடொன்றை பருத்தித்துறை காவல் துறையினர் மீட்டு பருத்தித்துறை நீதி மன்றில் ஒப்படைத்தனர்.

அல்வாய் வடக்கு வேதக் கோயிலடியில் முருகேசு மயில்வாகனம் என்பவரது மாட்டை திருடிய குற்றத்திற்காக நீதியாளர் பிரதீபா அந்நபருக்கு மூவாயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் தவறின் 140 நாட்கள் கட்டாய சேவையில் ஈடுபடுமாறும் தீர்ப்பளித்தார். (யோ)

## விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி)

கடலிலும் தரையிலும் பல வீரகாவியங்களைப் படைத்த பொலிகண்டி மண்ணின் மைந்தர்கள் நினைவாக பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் கலைவிழாவும் இன்றும் நாளையும் கழக மைதானத்தில் நடைபெறும்.

இவ்விளையாட்டிற்கு கடற்புலிகளின் தளபதி திரு. அ. கங்கை அமரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் தமிழீழ தேசியக் கொடியை திரு. அ. கங்கைஅமரன் ஏற்றி வைக்க, கழகத்தலைவர் திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் கடற்புலிகள் மகளிர் தளபதி செல்வி ஜெயந்தி மங்கள விளக்கேற்றி வைப்பார்.

பெண் வீராங்கனைகளின் மயிர்க்கூச்செறியும் வீரதீரச் செயல்களும் இடம்பெறும்.

(யோ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு

27- 01- 1935

உதிர்வு

10- 05- 1994



## திருமதி இராஜம் கதிர்காமத்தம்பி

(அருணர்வளவு, அல்வாய் மேற்கு)

இல்லறத்தை நல்லறமாய் இனிதே நடாத்தி
பெறர்க்கரிய செல்வம் இருபிள்ளைகள் பெற்று
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாயானாய்.
அம்மா அம்மா என ஆவலுடன் நாமழைக்க
இம்மாநிலத்தில் இனி யாரம்மா எங்களுக்கு
குஞ்சியம்மா என்றால் குயிலாக ஒலிப்பீர்கள்
இளையம்மா என்றால் இனியமொழி பகர்வீர்கள்
கண்ணிமைக்கும் நேரத்தில் காலன் கவர்ந்துவிட்டான்
எண்ணி எண்ணித் துடிக்கின்றோம் கண்ணீர்
வடிக்கின்றோம்
ஈசனடி சேர்ந்து இறைபதம் எய்திட
பாசமலர் கொண்டு பணிகின்றோம் தாயே.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்ட உறவினர்கள், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் முதல் சகல உறுப்பினர்கள், அயலவர்கள், அதிபர், ஆசிரியர்கட்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள், வாகன வசதிகள் மற்றும் பல உதவிகள் செய்த யாவர்க்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

09- 06- 94இல் இன்றுஎமதில்லத்தில்நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

**அன்புக்கணவன், மகள், மகன், மருமகன், பெறாமக்கள்.**

(சி 9618)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## செயற்குழு உறுப்பினர்பதவி கூரேயால் நிராகரிப்பு

(கொழும்பு)

செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்ட போதும் செயற்குழு கூட்டத்தில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என முன்னாள் ஐ. தே. க. பொதுச்செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரே முடிவு செய்துள்ளார் என தெரிய வருகின்றது.

தன்னை செயற் குழு உறுப்பினராக ஜனாதிபதி நியமனம் செய்தது ஒருகண்டுடைப்பு நடவடிக்கை என்றும் இதனாலேயேதான் இம் முடிவுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வீடுஉடைத்துதிருடியவருக்கு நீதிமன்றம் தண்டனை

(வடமராட்சி)

வீட்டை உடைத்து வீட்டில் உள்ள பொருள்களைக்கொள்ளையடித்த குற்றத்திற்காக சந்தேக நபருக்கு மூவாயிரம் ருபா குற்றப்பணம் கட்டுமாறும் தவறின் 120 நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுத்துமாறும் பருத்தித்துறை நீதியாளர் பிரதீபா தீர்ப்பு வழங்கினார்.

கரவெட்டி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசலிங்கம் என்பவரது வீட்டை உடைத்து 4 ஆயிரத்து 780 ருபா பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்ட கரவெட்டி மேற்கைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே இத் தண்டனை வழங்கப்பட்டது.

களவாடப்பட்ட பொருள்கள் பருத்தித் துறை காவல் துறையினரால் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டது- (யோ)

# ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்படும்

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் நவம்டர் 15 ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையே நடைபெறும் என்றும், அதே மாதம் 20 ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையே பாராளுமன்றம் கலைக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலின் முடிவுகள் முழுமையாக தெரியவந்த பின்னரே பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் உறுதியாகக் கூறப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடையும் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட அபேட்சகர்களுக்கு கட்சியின் நியமனப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது எனவும் ஐ. தே. கவின் தலைமைப்பீடம் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை அடுத்த பொதுத் தேர்தல் தொடர்பாக ஐ. தே. க. யாரைத் தெரிவு செய்வது என்பது தொடர்பாக ஜனாதிபதியும், பொதுச் செயலாளருமே தீர்மானிப்பார்கள் எனவும் பரவலாக நம்பப்படுகின்றது.

# பொலிகை மண் பெற்றெடுத்த மாவீரர்கள் நினைவாக

ஒற்றுமை வி. கழகம் நடாத்தும்

# விளையாட்டுப் போட்டியும் கலை விழாவும்

காலம்:- 09, 10 - 06 - 94 இரு தினங்கள்

இல்ல விளையாட்டுப் போட்டியுடன் பார்வையாளருக்கான குத்துச்சண்டை, மல்யுத்தம் உட்பட சகல விளையாட்டுக்களும்

09 06-94 கழக மைதானத்தில்

இரவு 8 மணிக்கு ஆரம்பமாகும்


திரு. நடராசா சோதிசிவம்

அவர்களின் மாணவர்களினதும் அவரது அன்பிற்குரிய

மாணவரான தமிழாராய்ச்சி மாநாட்டு புகழ்

பொலிகை தில்லை - சிவலிங்கத்தின்

மாணவர்களினதும் சிலம்ப விளையாட்டுக்கள் நடைபெறும்.





வீர தீர சாகச விளையாட்டுக்கள்

10-06-94 மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்

## சுதந்திரகட்சியின்திட்டத்தை சிங்களவர்ஆதரிக்கக்கூடாது

### தேசப் பிரதிசீலி முன்னணி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரே நிர்வாக மாகாணமாக பிரகடனப்படுத்துவது சுதந்திரக்கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் இடம்பெறும். இதனைப் பொதுமக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. இவ்வாறு தேசப் பிரதிசீலி முன்னணியின் பொதுச்செயலாளர் பொங்கமுவ தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலைப்பாடுகள் இனத்திற்கு செய்யும் சூழ்ச்சியாக அமையும் என்றும், எனவே உங்கள் பெறுமதியான வாக்குகளை இத்தகைய நிலைப்பாடுகளை மேற்கொள்ளும்கட்சிகளுக்கு வழங்கக் கூடாது என்றும்,பௌத்த சிங்கள மக்களுக்கு வேண்டுகோள் விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மைய 'இந்து' பத்திரிகையில் வெளியாகியுள்ள ஒருசெய்தியை மேற்கோள் காட்டியே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்டம் தவிர்ந்த கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைக்க சுதந்திரக்கட்சி திட்டமிட்டிருப்பதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் நீக்கப்பட்டால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுவிடுவார்கள் என்றும், இதன் மூலம் தமிழ் அரசாங்கம் ஒன்று அமைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்றும், சிங்கள பௌத்தர்கள் தெற்கில் கடலில் குதிக்கும் நிலை தோன்றும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## வினாத்தாள்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் 11 பரீட்சை நிலையங்களில் நாளைமறுதினம் சனிக்கிழமைகாலை 9-00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இருந்தும் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த சில பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

இதனை அடுத்து அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் யாழ். கல்வித் திணைக்களத்தில் முறையிட்டுள்ளனர். (பா)

## ஐ. தே. க. செயலர் காமினி மட்டுநகர் விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கும் காமினி விஜயசேகரா எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மட்டு ... ரவாளர்களைச் சந்தித்து அன்றைய தினம் கூட்டமொன்றை நடத்துவார்.

ஐக்கிய தேசியக்கட்சி கிளைகளுக்கு புத்துயிர் அளித்து



10-08·94 மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்

பருத்தி நகர் தந்த பெருந்திறல் சான்றோன்

**திரு. M. துரைரத்தினம்**

அவர்களும் அவரின் மாணவனாகிய பொலிகையூர் தந்த

**திரு. சாண்டோ S. செல்வராஜா**

இவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட எமது கழக வீர-வீராங்கனைகளின்
மயிர்க்கூச்செறியும் வீர தீர சாகச விளையாட்டுக்கள் வரிசையில்

தமிழீழத்தில் முதன் முதலாக பெண் வீராங்கனைகளாக



செல்வி தங்கவேலாயுதம் ஜமுனா
அதிபாரம் கொண்ட உழவுயந்திரத்தையும்



செல்வி அமிர்தநாதர் மாலா
அதிபாரம் கொண்ட E.L.F. வாகனத்தையும்

தமக்கு மேலால் ஏற்றுவார்கள்



★ தங்கவேலாயுதம் தங்கேஸ்வாராசா
அதிபாரம் கொண்ட இரண்டு இசுசு லொறிகளையும்

★ செல்ல மாணிக்கம் ரஞ்சகுமார்
அதிபாரம் கொண்ட இரண்டு உழவுயந்திரத்தை ஆட்களை ஏற்றி
ஒன்றன் பின் ஒன்றாக(தொடராக) மார்பின் மேல் ஏற்றுவார்கள்

★ கணேசமூர்த்தி கவீந்திரன்
தமது தலை முடியினால் வாகனம் ஒன்றை கட்டி இழுப்பார்
(காலை 7 மணி)

★ சிவலிங்கம் பிறேம்சிங்
தமது தலை முடியினால் ஓடும் மோட்டார் சைக்கிளை
இழுத்து நிறுத்துதல்

★ தங்கவேலாயுதம் பரமானந்தம்
இரண்டு உழவு இயந்திரத்தை மார்பின் மேல் ஏற்றுதல்

★ குணபாலசிங்கம் சுரேஷ்குமார், மருதநாயகம் பாலு
இருவரும் மார்பின் மேல் பாரம் கொண்ட பாறாங்கற்களை
வைத்து சம்மட்டியால் அடித்து உடைப்பார்கள்

★ பிலோமிநாதர் எட்வேட்
நெருப்பு புதைகுழியினுள் பலமணி நேரம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(8425)

**பொலிகண்டி ஒற்றுமை வி. கழகம்**

---

விஜயசேகரா எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்ய இருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அங்கு காமினி விஜயசேகரா ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற ஐக்கிய தேசியக்கட்சிப் பிரதிநிதிகள், வேட்பாளர்கள் மற்றும் ஆத

களுக்கு புத்துயிர் அளித்து இளைஞர் அணிகளை பிரதேச மட்டங்களில் செயற்படுத்தி அமைப்பாளர்களை நியமித்தல் போன்ற விடயங்களும் எதிர்காலத்தில் வரும் பாராளுமன்றத்தேர்தல்களை எதிர்கொள்ளுதல் போன்ற விடயங்கள் ஆராயப்படும் என தெரியவருகின்றது.

## ஒரு சர்வாதிகாரி போன்று அரசாங்கம் நடக்கிறது

### சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் இல்லை. யுத்தத்திற்கான செலவுகள் செய்யப்படுகின்றதே தவிர மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை. ஒரு சர்வாதிகாரி போன்றே இன்றைய அரசாங்கம் நடக்கின்றதுஎன எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஞாயிறு ''லங்கா தீப'' பத்திரிகைக்குஅளித்த பேட்டியில் அவர் மேற்படி கருத்தைதெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் யுத்தம் நடைபெறும்போது நயவஞ்சகமான முறையில் ஆயுத வியாபாரத்தினால் பல பெரியவர்கள் கமிஷன் பெற்றுள்ளனர். இவர்கள் மிகவும் சொகுசான வாழ்க்கை வாழ்கின்றார்கள், என தெரிவித்தார்.

இவற்றிற்கு தேர்தல் மூலம் ஒரு முடிவு கட்ட வேண்டும். இதற்கான ஒரு தெளிவான தேர்தல் விஞ்ஞாபனத்தை விரைவில் வெளியிடுவோம். தற்போது சிங்கள, தமிழ், முஸ்லிம் இன தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறுகின்றது. எனவே சகல தரப்பினரும் ஒத்துக் கொள்ளும் ஓர் அரசியல் தீர்வை நாம் முன்வைப்போம் என்றார்,

## இறுதிப்போட்டி முடிவுகள்

யாழ். மாவட்டபாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட கர பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் யா| நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டிகளில் 17 வயதுப் பிரிவில் யா| மத்திய கல்லூரி அணி 1ஆம் இடத்தைப் பெற்று லெப்ரினன்ட் கேணல் றீகன் சுற்று வெற்றிக் கேடயத்தைப்பெற்றுக் கொண்டது. 2ஆம் இடத்தை யா| கனகரத்தினம் ம. ம. வி. பெற்றுக் கொண்டது.

19வயதுப்பிரிவிலும்யா| மத்திய கல்லூரியே 1ஆம் இடத்தைப் பெற்று லெப்ரினன்ட் கேணல் ஜோய் சுற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 2ஆம் இடத்தை யா| சென் ஜோன்ஸ் கல்லூரி பெற்றுக் கொண்டது.

நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்



சிந்தனைக்கு

மூக்குப் போனாலும் பரவாயில்லை
எதிரிக்கு சகுனம் பிழைத்தால் சரி.

- தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 09.06.1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## உட்கட்சிப் பூசலின் உச்சக்கட்டம்

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள உட்கட்சிப்பூசலானது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இதன் வெளிப்பாடாக ஐ. தே. க விற்குள் உள்ள போட்டிக் குழுக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளர் தோல்வியடைவதையே விரும்பும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

இக்குழப்பம் 'கிழநரி' எனக் குறிப்பிடப்படுபவரும், பாராளுமன்ற அரசியலில் காய்நகர்த்தலில் பெயர் பெற்றவர் எனக் கூறப்படுபவரும், சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்தனாவே கைவிரிக்கும் நிலைக்கு சென்றுவிட்டதாகவும் தெரியவருகின்றது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது அணியினரையும், சிஷ்யர்களையும் கூட காப்பாற்ற முடியாமல், நடப்பது நடக்கட்டும், வருவதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறும் கட்டம் வரையும் நிலைமை சென்றுள்ளது.

ஜே ஆர். ஜெயவர்த்தனா ஐ. தே. க விற்குள் தலைமைத்துவத்தைக் கைப்பற்றியமையும், தனது ஜனாதிபதிப் பதவிக் காலத்தை எதிர்ப்பின்றிக் கொண்டு சென்றமையும் எதிர் அணியினரை உடைத்தல் / பிளத்தல் என்பதன் அடிப்படையிலேயே தான். இந்நிலையில் அவரால் இன்று அதே தந்திரத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாமல் போய் விட்டதென்றால் பிரச்சினையின் அளவைப் புரிந்துகொள்ளலாம்ஆனால், இவ்வாறான ஒரு நிலை உருவாவதற்கு அடிப்படைக் காரணமும் அவர்தான். எதிரணியினருக்குள் எவ்வாறு முரண்பாடுகளை வார்க்கும் யுக்திகளைக் அவர் கையாண்டாரோ அதேபோன்று ஐ.தே. கட்சிக்குள்ளும் அன்று அவர் கையாண்ட வழிமுறையே இன்று இந்நிலைமைக்குக் காரணமாகும்.

இதேசமயம், ஜே. ஆரின் இத்தந்திரம் ஓர் எல்

# தேர்தல் சீர்திருத்த மசோதா அ.இ.அ.தி.மு.க. ஆதரவுதரும்

டில்லி)

தேர்தல் ஆணையகத்தைப் பலஉறுப்பினர்களைக்கொண்டதாக மாற்றும் தேர்தல் சீர்திருத்த மசோதாவிற்கு ஆதரவளிப்பதென அ. இ. அ.தி. மு. க. முடிவு செய்துள்ளது.

சென்னையில் இக் கட்சி வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை யொன்றில் மக்கள் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டத்தை தான் எதிர்க்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இம் மாதம் 13ஆம் திகதி முதல் பாராளுமன்றத்தில் தேர்தல் சீர்திருத்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது சபையில் தவறாது சமுகமளித்து, கட்சியின் நிலைக்கு ஏற்ப வாக்களிக்கும்படி கோரும் மூன்று வரிகளைக் கொண்ட கொறடா உத்தரவு ஒன்றை காங்கிரஸ் கட்சி தனது உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

## சிம்லா உடன்பாட்டின்படி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு

### -ரஷ்யா வலியுறுத்து

(டில்லி)

வெளியார் குறுக்கீடு ஏதுமின்றி சிம்லா உடன்பாட்டின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ரஷ்யா மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

ரஷ்யாவின் துணைப்பிரதமர் யூறி எஸ். யாராவ் புதுடில்லியில் நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவை சந்தித்துப்பேசிய போது இதனைத் தெரிவித்தார்.

முக்கியமாக அரசியல் பிரச்சினைகளில் ரஷ்யாவின் ஆதரவை பி. வி. நரசிம்மராவ் இச் சந்திப்பில்புகழ்ந்து பாராட்டியதுடன் மாஸ்கோவிற்கான தமது விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## கொலம்பியாவில் பூமியதிர்ச்சி

(சூலா)

கொலம்பியாவில் திங்களன்று இடம்பெற்ற பூமியதிர்ச்சியை அடுத்து இடம்பெற்ற பல்வேறு மண் சரிவுகளிலும் சிக்கி நூற்றுக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். மேலும் பல நூறு பேர் காணாமற் போயிருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த மண்சரிவினால் ஒரு நகரமே முற்றாகச் சிதைந்து போய் விட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# எம். ஜீ. ஆர் பெயரில் குளிர்காய எவரையும் அனுமதிக்கமாட்டோம்

### - தமிழக முதல்வர் ஜெயலலிதா

(சென்னை)

எம். ஜீ. ஆர். என்னும் திருநாமத்தை உச்சரிப்பதிலேயே உள்ளம் புளகாங்கிதம் கொள்ளும் லட்சோப லட்சமென நிறைந்திருக்கும் அ. தி. மு.க. உடன்பிறப்புகளான எங்களுக்கு இல்லாத அக்கறை அந்தத் தலைவனின் ஆட்சியை 1980 இல் கலைத்து விட்டு கொல்லைப்புற வழியிலே அதிகாரத்தைப் பங்கு போட நினைத்த கூட்டத்திற்கு காங்கிரசுக்கு இன்று ஏன் வந்தது? எப்படி வந்தது? இதனை மக்கள் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஈரோட்டில் எம். ஜீ. ஆர் சிலையை திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், எம். ஜீ ஆருக்கு எப்போது எல்லாம் சிறப்பு செய்ய வேண்டுமோ எப்படி எல்லாம் சிறப்பு செய்யவேண்டுமோ? என்ன என்ன சிறப்பு செய்யவேண்டுமோ அவற்றை ஆட்சி என்று தானே ஆட்சியில் அமர்ந்தவுடன் நாங்கள் அறிவித்தோம்.

எனவே அந்த மகத்தான மாமனிதரின் வழித் தோன்றல்களாய், வாரிசுகளாய். அவர் சுட்டிக்காட்டிய நெறிமுறைகளை அப்படியே கட்டிக் காப்பாற்றி வரும் எங்களுக்கு யாரும் கற்றுத்தர வேண்டிய அவசியமும் இல்லை. அவர்களுக்கு அந்த அருகதையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல் 1994- 06- 09 வியாழன் இரவு

08.01- சொல்லுங்கள் பார்க்கலாம்
08. 10- உரை- ''வழக்கு மொழியும் இலக்கிய மொழியும்''
08. 20- உழைப்போம் உயர்வோம்
''வீதிகளும் அவசியம் எனத் தெரிவிக்கும் உட்கட்டுமானம்'' சித்திரம்
08. 30- செய்திகள்
08. 40- லெப்ரினன்ட் கேணல் டேவிட் நினை

## கமிஷன் அமைக்க இணக்கம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலும், ஜோர்தானும் தமக்கிடையே நிலவும் எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக கமிஷன் ஒன்றை அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. வாஷிங்டனில் நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

## சீனா எச்சரிக்கை

(பீகிங்)

அணு ஆயுதப் பிரச்சினை தொடர்பாக வடகொரியா மீது பொருளாதாரத் தடை

# அணு ஆயுதத் தயாரிப்பை வடகொரியா கைவிடட்டும்

### - தென்கொரியா கோரிக்கை

வடகொரியா தனது அணு ஆயுத திட்டத்தைக் கைவிட வேண்டுமெனவும் கொரியத் தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்த பாடுபட வேண்டுமெனவும் தென் கொரிய ஜனாதிபதி கிம் இல் சுங் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் இக் கோரிக்கையை பிரதமர் கொரிய இணைப்பு தொடர்பான ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

வட கொரியா அணு ஆயுதங்களை தயாரிப்பதை முற்று முழுதாக தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கருத்தை உலகம் கொண்டிருப்பதாகவும் தென் கொரிய ஜனாதிபதி தமது கோரிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென் கொரிய ஜனாதிபதி ரஷ்யாவுக்கும் உஸ்பெக்கிஸ்தானுக்குமான தனது ஒரு வார கால விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று மாலை நாடு திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பசுபிக் சமுத்திர தீவுகள் கடலுக்குள் அமிழலாம்

### - கிறீன் பீஸ் எச்சரிக்கை

(லண்டன்)

பூமி தற்போது கடுமையாக வெப்பமடைவதனால் மிக மோசமானதொரு காலநிலை மாற்றமும், சுற்றாடல் அழிவுகளும் ஏற்படப்போகிறது என்று உலக சுற்றாடல் நிறுவனமான கிறீன் பீஸ் தெரிவித்துள்ளது.

விஞ்ஞான சஞ்சிகைகள், செய்தித்தாள் கம்பியூட்டர் புள்ளி விபரங்கள் என்பவற்றிலிருந்து, உலக காலநிலை மோசமடைந்திருப்பதற்கான ஐந்நூற்றுக்கு மேற்பட்ட உதாரணங்களை இக்குழு ஒரு அறிக்கையாகத் தொகுத்துள்ளது.

மேலும் உலகம் வெப்பமடைந்து, நீண்ட காலப் போக்கில் காலநிலை மாற்றமடையும். காபனீரொட்சைட்டு மற்றும் பல வாயுக்கள் வளியில் அதிகரித்துக் காணப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் 1980-ம் ஆண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரை ஆகக் கூடுதலான வெப்பநிலை நிலவியது எனவும், 1990-ம் ஆண்டு அதிக வெப்பநிலை நிலவியதொரு ஆண்டாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது எனவும் கிறீன் பீஸ் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் இக் கடுமையான வெப்பநிலை தொடர்ந்து நிலவுமானால் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள தீவுகள் அனைத்தும் கடல் மட்டம் உயர்வதால் அமிழ்ந்து விடும் எனவும், பல தாவர இனங்களும், விலங்கினங்களும் அழிவை எதிர் நோக்கும் எனவும் கிறீன் பீஸ் எச்சரிக்கை செய்துள்ளது.

## நாடாளும் ராணிக்கு நாவடக்கம் தேவை

### -கருணாநிதி எச்சரிக்கை

(சென்னை)

நெருப்பு விழிகாட்டி வெறுப்பு மொழிகக்கும் நாடாளும் ராணிக்கு நாவடக்கம் தேவை. இவ்வாறு தி.மு.க. தலைவர். மு. கருணாநிதி முரசொலியில் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்

அவர் அதில் மேலும் கூறுகையில், ஆட்சி எனக்கு மட்டும்தான் என் குடும்பத்துக்கு மட்டும்தான் என்றுநான்கருதி செயல்பட்டேனா? நான் என்ன சபாநாயகரை கீழேணை அந்த ஆசனத்தில் அமர வைத்தவனா நான்? என்றும் கேட்டுள்ளார்.

அத்துடன் காதலித்து, மணந்து, கழுத்திலே மாங்கல்யம் மின்ன பல்லாண்டுகள் எந்த ஜானகி அம்மையார் எம். ஜி. ஆருடன் இல்வாழ்வு நடத்தினாரோ, அந்த ஜானகி அம்மையாரையேஎம். ஜி. ஆரின் மனைவியல்ல என்று பொய் கூறி அந்த அம்மையார் எம். ஜி. ஆருக்கு மோரில் விசம் கலந்து கொடுத்ததாக

இநேசமயம், ஜே. ஆரின் இத்தந்திரம் ஓர் எல் லைக்கு அப்பால் செல்ல முடியாமல் இருப்பதற்கு அதிகாரம் வேறு ஒருவரின் கையில் இருப்பதே கார ணமாகும். அதிகாரம் கையில் உள்ள அணியின் செல்வாக்கு அதிகரிப்பதும் தவிர்க்க முடியாத ஒன்று தான். இந்நிலையில், டி. பி. விஜேதுங்காவின் செல்வாக்கும், அவரின் ஆதரவு பெற்ற காமினி யின் செல்வாக்கும் கட்சிக்குள் ஆதிக்கம் செலுத்து வதும் புதியதல்ல. இதனை ஜே.ஆரும் உணர்ந்து கொண்டுள்ளார். இதன் காரணமாகவே வெளிப் படையாக காமினியுடனோ, டி. பியுடனோ அவர் மோத முனையவில்லை.

இந்நிலையிலேயே, தேர்தலில் கட்சியின் தோல் வியை போட்டிக் குழுக்கள் விரும்புவதாகத் தெரி கின்றது. இந்தேர்தல் தோல்வியானது, ஜனாதிபதி யினதும் - காமினியினதும் அதிகாரத்தையும், ஆதிக் கத்தையும் அழிக்கும் எனப் போட்டிக் குழுக்கள் தர ப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது தேர்தலில் தோல்வி என்பது கிட்டுமானால், ஐ. தே. க விற்குள் அதிகாரத்தில் உள்ள அணி ஒன்று இல்லாதுபோகும். இதன் விளைவாக, கட்சிக்குள் இருக்கும் அணிகள் சம அந்தஸ்துப் பெற்றவையாகவும், புறக்கணிக்க முடியாதவையாகவும் மாறிவிடும். சிலவேளை தேர் தல் தோல்வி படுமோசமாக அமையுமானால், ஐ. தே. க வின் இன்றைய தலைமையே அரசியல் துற வறம் பூண வேண்டி வரலாம்.

இவ்வாறாக, ஐ.தே. க வின் தேர்தல் தோல்வி என்பது, தமது நிலைகளை உறுதிப்படுத்த உதவும் என்றே போட்டிக் குழுக்கள் எதிர்பார்க்கின்றன. ஆனால், சிலவேளை இத்தோல்வியானது கட்சியை பல அணிகளாக உடைத்து விட்டாலும் ஆச்சரியப்ப டுவதற்கில்லை. ஆனால், இவை யாவற்றிலும் உள்ள துயர் என்னவென்றால், ஐ. தே. க. தலைமை கடந்த காலத்தில் ஏனைய கட்சிகளை உடைத்தது போன்றதல்ல இந்நிலை. மாறாக, அதி காரப் போட்டியால் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் அவலம். தெளிவாகக் கூறுவதானால் ஜனநாயக அமைப்பில் சர்வாதிகாரம் புரிய நினைத் ததின் விளைவை ஐ. தே. க இன்று அனுபவிக்கின் றது எனக் கூறலாம்.

எல்லாம் சிறப்பு செய்யவேண் டுமோ? என்ன என்ன சிறப்பு செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டிய சிறப்போடு செய்ய எங்களுக்குத் தெரியும். இதிலே குறுக்குச் சால் ஓட்டி சிலர் குளிர் காயவும் ஆதா யம் தேடவும் நாங்கள் அனுமதி க்க மாட்டோம். ஓங்கு புகழ் கொண்ட எங்கள் தலைவரது திருப்பெயரால் செங்கற்பட்டு எம். ஜீ. ஆர் மாவட்டம் கண் டோம். செங்கற்பட்டு முழு தும் எம். ஜீ. ஆர். போக்கு வரத்துக் கழகம் ஓடச்செய் தோம். புரட்சித்தலைவர் எம். ஜீ. ஆர். சத்துணவுத் திட் டம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தோம். இரண்டரைக் கோடி ரூபா செலவில் அத் தலைவரின் நினைவிடம் கோவில் போல திகழச் செய் துள்ளோம். இன்னும் என் னென்ன வகைகளில் எல்லாம் அத்தலைவனின் புகழ் நிலை க்க சிறப்பு செய்ய வேண் டுமோ அத்தனையையும் செய்து கொண்டு தான் இருக் கிறோம். நாங்கள் நடத்து கின்ற ஆட்சியே எம். ஜீ. ஆர்.

08. 30- செய்திகள்
08. 40- லெப் ரினன்ட் கேணல் டேவிட் நினை வாக சிறப்பு நிகழ்ச்சி ''கடலில் கலந்த காவிய நாயகன் டேவிட்''

**1994- 06- 10**
**வெள்ளி காலை**

07. 02- மாவீரவணக்கம்
07. 15- விடுதலை கானங் கள்
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய் திகள்
07. 40- விடுதலை கானங் கள் நிகழ்ச்சியின் தொடர் ச்சி

## மாஸ்கோவில் குண்டுவெடிப்பு

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோ நகர வீதியில் நேற்று முன்தினம் கார் ஒன் றில் மறைத்து வைக்கப்பட்டி ருந்த பாரிய வெடிகுண்டொ ன்று வெடித்துள்ளது. இத னால் ஒருவர் கொல்லப்பட்ட துடன் மற்றும் பலர் காயம டைந்துள்ளனர்.

வருடம் இரண்டரை லட்சத்தால்

## சனத்தொகை அதிகரிக்கிறது தினமும் 700 குழந்தைகள் பிறப்பு

**- தொழில் அமைச்சர் தகவல்**

இலங்கையின் சனத்தொகை வருடா வருடம் இரண்டரை லட்சத்தால் அதிகரித்து வருவதாகவும், நாள்தோறும் எழுநூறு குழந்தைகள் பிறப்பதாகவும் தொழில், தொழில்பயிற்சி அமைச்சர் எம். எச். எம் அபுசாலி கூறியுள்ளார்.

கொழும்பு ஜானகி ஹோட்டலில் குடும்பக் கட் டுப்பாடு தொடர்பான கல்வி புகட்டுதலை மையமா கக் கொண்டு நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் அங்கு மேலும் கூறுகை யில், பொருளாதார ரீதியில் நாடு முன்னேறுவதற்கு குடித்தொகைப் பெருக்கம் பெரும்தடையாக இருப்பதா கவும், குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்தை தீவிரமாக்கி னால் தான் 2050-ம் ஆண்டளவில் இச்சனத்தொகைப் பிரச்சினையை கட்டுப்படுத்த முடியும் எனவும்தெரிவித் தார்.

அணு ஆயுதப் பிரச்சினை தொடர்பாக வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதை சீனா வன் மையாக எதிர்த்துள்ளது. இது தொடர்பாக சீனா மேலும் கருத்து வெளியிடுகையில் வட கொரியா மீது தடைகள் விதி ப்பது விவேகமான செயலாக இருக்காது எனவும் தெரிவித் துள்ளது.

இந்த பிராந்தியத்தில் இருக் கும் வீட்டோ ரத்து அதிகாரம் படைத்த ஒரே நாடு சீனா என்பதால் இவ் விடயத்தில் சீனாவின் கருத்து மிக முக்கிய த்துவம் வாய்ந்ததாகும்.

## கலந்துரையாடல்

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் மேற்கொள்ளப் பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு யாழ் கல்லுண்டாய்வெளிப் பிரதேசத்தில் 50,000 பனை விதைகள் நடுகை செய்யப்பட உள்ளன.

வலிகாமம் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்களான சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப் பழை, சுன்னாகம், கோண் டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக செயற் படுத்தப்படவுள்ள இத்திட் டம் சம்பந்தமான கலந்துரை யாடல் இன்று மேற்படி கொத் தணி நடுவப்பணியகத்தில் நடைபெற உள்ளது.

## தீக்கிரை

வவுனியா கதிரேசன்வீதியில் இயங்கி வந்த தனியார் கல்வி நிலையமொன்று தீக்கிரையாக் கப்பட்டுள்ளது. கடந்த ஞாயி றன்று அதிகாலையில் மர்ம மான முறையில் தீப்பற்றிக் கொண்டதாகவும், இத்தீயி னால் சுமார் ஒரு லட்சம் ரூபா வரையில் நட்டம் ஏற் பட்டிருப்பதாகவும் கூறப்படு கிறது.

செயல்பட்டேனா? நான் என்ன சபாநாயகரை கீழே தள்ளி விட்டு அவையில் அவர் நாற்காலியிலா அமர்ந்துவிட் டேன்? துணை சபாநாயகரை தூரப்போ என்று துரத்தி விட்டு, அவை உறுப்பினரே அல்லாத தோழிப் பெண் யார் எம். ஜி. ஆருக்கு மோரில் விசம் கலந்து கொடுத்ததாக ஏடுகளுக்கு பேட்டி கொடு த்து தமிழக அரசியல் களத் தில் பண்பாட்டு சிதைவையும் சீரழிவையும் ஏற்படுத்தியவர் ஜெயலலிதா என்றும் குறிப் பிட்டுள்ளார்.

## அகதிகளை அனுப்பினால் போராட்டம் நடக்கும்

**வை. கோ. எச்சரிக்கை**

(சென்னை)

இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பினால் அறப் போராட்டம் நடத்துவோம் என்று வை. கோபாலசாமி அறிவித்துள்ளார்.

இலங்கை அகதிகள் விவகா ரம் தொடர்பாக அண்மை யில் அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ள அவர் அதில் மே லும் குறிப்பிடுகையில், தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து ஆண்டுகள் பல்வாக இருண்டு கிடக்கின்ற- எதிர்காலத்தை எண்ணி வேதனைத் தீயில் சிக்கித் தவித்துக் கொண்டி ருக்கின்ற இலங்கை அகதி களை திருப்பி அனுப்ப வேண் டுமென்று முதல்வர் ஜெய லலிதா பேசியிருப்பது மனிதா பிமானமற்றதாகும்.

அல்லலுக்குள்ளாகி அடைக் கலம் தேடிவரும் அகதிகளுக்கு தஞ்சம் வழங்கி பாதுகாப்ப தை ஜெனிவா ஒப்பந்தமும் சர்வதேச ஒப்பந்தங்களும் மனிதாபிமான அடிப்படை யில் ஏற்றுக் கொண்டுள்ளன.

இலங்கை அகதிகள் அனை வரையும் நிர்ப்பந்தப்படுத்தி திருப்பி அனுப்ப தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமானால், மன்னிக்க முடியாத ஈவு இரக்கமற்ற அச் செயலை எதிர்த்து கழ கம் அறப்போராட்டம் நட த்த நேரிடும் எனவும் தெரிவித் துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க.வெல்வது நிச்சயம்

**- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க**

(கொழும்பு)

1977ஆம் ஆண்டு முதல் இதுவரை நடைபெற்ற தேர் தல்களில் ஐ. தே. க வே அமோக வெற்றியடைந்துள் ளது. அதுபோலவே இனிவரும் தேர்தல்களிலும் ஐ,தே.க. வெற்றிபெறும். இவ்வாறு பிர தமர் ரணில் விக்கிரமசிங்க பதுளை சைமன் பீரிஸ் மண்ட பத்தில் நடைபெற்ற பதுளை மாவட்ட ஐ.தே.க. பேராளர் கள் மாநாட்டில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறு கையில், எதிர்வரும் ஜனாதி பதி தேர்தல் ஒரு முக்கிய மான தேர்தல் ஆகும். இத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றால்தான் பாராளுமன் றத் தேர்தலிலும் வெற்றி பெறலாம். அதிலேதான் ஜன நாயகத்தின் வெற்றியும், பொதுமக்களின் வெற்றியும் தங்கியுள்ளது.

# மாமனார் வீட்டுக்கு குண்டு வீசிவிட்டு தற்கொலைக்கு முயன்ற கான்ஸ்டபிள்

(கொழும்பு)

வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு நாடு திரும்பிய தமது மனைவி தற்கொலை செய்துகொண்டதை தாங்க மாட்டாத பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தமது மாமனாரின் வீட்டுக்கு வந்து இரு கைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதுடன் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்ய முயன்ற சம்பவம் ஒன்று பொரளை வனத்தமுல்ல பகுதியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் காமினி என்ற இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தற்போது துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின் மனைவிவெளி நாட்டில் பணிபுரிந்து நாடு திரும்பியபோது கொண்டு வந்த அவரின் பொருள்களை அவரின் பெற்றோரும் மைத்துனர்களும் பறித்துக்கொண்டனராம்.

இதனால் மனமுடைந்த மனைவி இரு வாரங்களுக்கு முன் மட்டக்களப்பில் தற்கொலை செய்துகொண்டார். இவரின் பிரிவை தாங்காத காமினி மட்டக்களப்பிலிருந்து தனது ரி - 56 துப்பாக்கியையும் இரு கைக்குண்டுகளையும் எடுத்துவந்து தமது மனைவியின் பெற்றோர் வசித்த வனத்தமுல்ல வீடு மீது தாக்குதல் நடத்தினார்.

இதனால் வீடு தகர்ந்ததுடன் வீட்டிலிருந்த இருவர் காயமடைந்தனர். பின்னர் இவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 'காப்பரண்' வெளிவந்துவிட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னைவள அபிவிருத்திப் பகுதியால் வெளியிடப்படும் காப்பரண் முத்திங்கள் சஞ்சிகையின் நான்காவது இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் பனை நடுகை முயற்சியில் பாரிய வளர்ச்சி, பனைவள உற்பத்திப் பணியாளர்களுக்கு மேலதிகப் பயிற்சி, பனையைத் தறிக்கலாமா? ஒல்லித் தேங்காய் திருந்துவதற்கு, மூன்று வருடங்களில் பனை வெல்ல உற்பத்தியில் பிரமிக்கத்தக்க வளர்ச்சி ஆகிய கட்டுரைகளும் இளந்திரையனின் ''புரட்சிசெய்'' பனையும் பன்னிரு மாதங்களும் போன்ற கவிதைகளும், காயத்திரியின் ''ஆணவம்'', சயந்தனின் ''வாழ்க்கை'' எனும் கதைகளும்நேர்காணல் போன்ற பயன்மிக்க விடயங்களும் இடம் பெற்றுள்ளன.

## அரச ஊழியர் விபரம் திரட்ட நடவடிக்கை

(நல்லூர்)

1994 பங்குனி 1ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண பொதுத்துறை, உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமைபுரியும் ஊழியர்கள் விபரத்தை இலங்கை புள்ளிவிபரத் திணைக்களம் திரட்டி வருகின்றது. இதற்கானபடிவத்தில் கடமை புரியும் ஊழியர் பெயர், விலாசம், கடமை புரியும் ஊழியரின் சொந்த இடத்துக்கும், காரியாலயத்திற்கு மிடையேயுள்ள இடைத்தூரம் 1994 பங்குனி 1ஆம் திகதியில் அவர் பெற்ற சம்பளம் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் வேறுபடிகள் இதற்குரிய கழிவுகள் போன்ற விபரங்கள் அவரினால் பூரணப்படுத்தப்படவேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் விபரங்கள் கோட்ட ரீதியாகவே திரட்டப்படுகின்றது. கடந்த சில வருடங்களின் பின்னர் தற்போதுதான் இவ் விபரங்கள் திரட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. (17)

## லலித்கொலைக்குபயன்பட்ட வாகனம் பற்றி புதியதகவல்

லலித் அத்துலத் முதலி கொலைச் சந்தேக நபர்பயன்படுத்திய வாகனம் தொடர்பான தகவல்கள் ''இறு'' பத்திரிகைக்கு கிடைத்துள்ளதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி வாகன இலக்கம் 27 சிறி 6589 என்றும் இது நாறொயன்பிட்டி உதான மாவத்தையில் உள்ள ஒரு பாதாள உலக குற்றவாளியின் வதிவிடத்திற்குஅண்மையில்அண்மைக்காலத்தில்நிறுத்தப்பட்டிருந்ததுஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்தத்திற்கான

கிழக்கு பிரச்சினையை நாம் ஒரு தேசியப்பிரச்சினையாகக் கருதி அதன்படி செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் விமல்விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## ஜே. வி. பி உறுப்பினர் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

ஜே. வி. பியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தம்புள்ளை பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது

இவர் கைது செய்யப்படும் போது அவ்விடத்தில் இருந்து மூன்று தன்னியக்க ஆயுதமும் மீட்கப்பட்டதாக தம்புள்ளை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## எறிகணை

வரும் அவரது கைக்குழந்தையான ஒருவயதுடைய அசோக்குமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை கடற்கரை பகுதிகளை அண்டியும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. இவற்றினால் சேதம் எதுவும்

## சிபிடஸ்நிறுவனதலைவராக ஹேமா நியமனம்

(கொழும்பு)

வரையறுக்கப்பட்ட சிபிடஸ் நிறுவனத்தின் தலைவ ராக திருமதி ஹேமா பிரேமதாசா நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாகோ புறப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து ''மாகோ'' கப்பல் ஒரு தொகுதி அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களுடன் இன்று அல்லது நாளை புறப்படவுள்ளது.

இத்தகவலை யாழ். செயலகத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

(பா, தி)

## அவ்ரோ நோட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளை சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான ''அவ்ரோ'' விமானமொன்று நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ். வான்பரப்பில் பிரவேசித்த இவ் அவ்ரோ விமானம் பல தடவைகள் குத்திப் பதிந்து நோட்டமிட்டுச் சென்றது.

(பா)

## கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்து நடத்தவுள்ள கருத்தரங்கு ஒன்று நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் இன்று மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கிராமியப் பெண்களும் தலைமையும் என்னும் பொருளில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

## சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் சிப்பாய் ஒருவரின் கைக்குண்டு தற்செயலாக வெடித்ததில் அவர் அவ்விடத்திலேயேபலியானார். ஜி.ஏ.டி. ரணசிங்க என்ற சிப்பாயே பலியானதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## மதிய

படி பாடசாலை நண்பகலுக்குப்பின் மாலை நேரம் இயங்குவதில்லைஎனவும் அறியவருகிறது. இவர்களும் பாடசாலையை ஒரு நேரமாக நடாத்துமாறு தமது அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

## கொழும்பில்

தெரிய வந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் திருகோணமலை பொலிசாரி

## ஆணுக்குப் பெண் நிகர் பின்னர் இடையிலே சீதனச் சுவர்

# பிரேமா கொலை தொடர்பாக குடும்பத்தினருக்கு விளக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக நடைபெற்ற விசாரணை பற்றிய விபரங்களை பிரேமதாசா குடும்பத்தினருக்கு விளக்குவதற்கு பொலிஸ் மா அதிபர் தலைமையில் குழு ஒன்று நேற்று அவரின் வீட்டுக்கு சென்றதாக தெரியவருகின்றது.

பொலிஸ் மா அதிபர் தலைமையில் சென்ற இக் குழுவில் குற்றப்புலன் விசாரணை பொலிஸ் பொறுப்பதிகாரி அசோகா ராஜபக்ஷவும் இருந்தார் என்றும் இவர்கள் பிரேமதாசாவின் மகள் துலாஞ்சலி ஜெயக்கொடியையும் அவர்கள் உறவினர்களையும் விஜேராம மாவத்தை வீட்டில் சந்தித்து விளக்கம் கொடுத்ததாகவும் தெரியவருகின்றது.

# ஓய்வு பெற்ற விமானப்படையினரை மீண்டும் சேர்த்துக் கொள்ள சட்டம்

### பாராளுமன்றத்தில் நிறைவேற்றம்

[கொழும்பு]

சிறிலங்கா விமானப்படையில் ஓய்வு பெற்ற முன்னாள் படையினரை சேர்த்துக் கொள்ளும் திட்டம் ஒனறு நேற்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விமானப்படை கட்டளைச் சட்டம் மீதான பிரேரணை ஒன்றை கொண்டுவந்த பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க விமானப் படையில் ஓய்வுபெற்றவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தை முன் வைத்து அதை ஏற்றுக் கொள்ளும்படி கோரினார்.

அரசின் இத் திட்டத்தை சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தனர். நி[illegible] யுள்ள இளைஞர்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் ஓய்வுபெற்றவர்களை மீள படையில் சேர்த்து அவர்களுக்கு அதிக வசதிகளை வழங்கிக் கொண்டிருக்க முடியாது எனவும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிலர் கூறினர்.

பிரேரணையின் இறுதியில் பேசிய அமைச்சர் விமல் விக்கிரமசிங்க, அரசு விமானப் படையில் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் சேவையில் சேர்ப்பதற்கு காரணம் அவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருப்பதால்தான் என்றார். [illegible] னப்பிரச்சினையை தீர்க்க அரசுக்கு அக்கறை உண்டு. அதற்காக சிறு கட்சிகளுடனும் பிரபாகரனோடும் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். எதிர்வரும் காலங்களில் பேச்சுகள் நடக்கும் போது அரசு கவனமாக நடந்து கொள்ளும் எனவும் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## ஆர்எஸ்எஸ்குண்டுவெடிப்பு சென்னையில் வழக்கு

(சென்னை)

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னை ஆர். எஸ். எஸ். தலைமையகத்தில் நிகழ்ந்தகுண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு (சி. பி. ஐ. நேற்று சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

வழிதவறிய சமய வெறியர்கள் சிலரின் செயலினால்தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததென்று புலன் விசாரணையிலிருந்து தெரிய வந்திருப்பதாக சி. பி. ஐ. செய்திக் முக்கிய பங்குவகித்ததாகவும், இவர்களில் இமாம் அலி 1991 ஆம் ஆண்டு மதுரைக்கு அருகே மேலூரில் ஒரு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடையவர் என்பதற்காக காவலில் வைக்கப்பட்டிருந்த போதிலும் 1992 இல் காவலில் இருந்து தப்பியதாகவும் இச் செய்திக் குறிப்பு கூறுகிறது.

இந்த வழக்கை சி. பி. ஐ. விசாரிக்க வேண்டும் என தமிழக அரசு கேட்டிருந்தது. குற்றம் சாட்டப்பட்ட 18 பேரில் 12 பேர் காவலில்

## அதிகரித்த

டிருப்பது அநாவசிய செலவை ஏற்படுத்துகிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

1985ஆம் ஆண்டு தொடக்கம் விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்திகள் நல்ல முறையில் பாரமரிக்கப்படவில்லை என்றும் சில முழுமையாகவே பராமரிக்கப்படவில்லை என்றும் ஆனால் உலங்குவானூர்திகள் கொள்வனவு செய்யப்பட்டன என்றும் அவர் கூறினார். இவ் உலங்குவானூர்திகளை சிறிலங்காவிலேயே நன்கு பராமரிக்க முடியுமென்றும் இதற்கென தகுதி வாய்ந்த பொறியியலாளர் பலர் தம்மிடம் உள்ளனர் எனவும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் விமானங்

கள் விழுந்து வெடித்தன. இவற்றினால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (சி, தி)

## ஆங்கில

யாளர்கள் கொண்டு வரும் மருந்துப் பொருள்கள் பாவனைக்கு உகந்ததல்ல என காணுமிடத்து-அவற்றை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் பாவனைக்கு [உதவாத காலம் பிந்திய மருந்து பொருள்கள் விற்பனையை தடுக்க முடியும் எனவும் தேசிய பாதுகாப்பு அமைச்சு தலைமைச் செயலகம் இந்நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறு தனக்கு அனுப்பிய பணிப்புரையின் அடிப்படையிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஒழுங்குமுறை முன்னரும் இங்கு நடைமுறையில் இருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)


**யாழ். ஸ்ரீதரில்**

**புரூஸ்லி நடித்த**

**GAME OF DEATH**

**தினசரி**

பிற்பகல் 4.00மணி 6.00மணி

**சனி, ஞாயிறு**

காலை 10.30 மணி

பிற்பகல் 4.00 மணி 6.00மணி

(சி- 9570)


(கொழும்பு)

வரையறுக்கப்பட்ட சிபிடஸ் நிறுவனத்தின் தலைவ

## ஜனாதிபதி

இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்.

இதற்குத் தேவையான முயற்சிகள் யாவும் இரகசியமான முறையிலும் படிப்படியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொண்டமானுடனும் இரகசிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் காமினி திசாநாயக்கா போட்டியிட்டால் தொண்டமானின் முழுமையான ஆதரவும் வழங்கப்படும். இதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் ஐ.தே.க வினால் கொண்டு வரப்படும் திட்டங்கள் மற்றும் அரசியல் மாற்றங்கள் காமினி திசாநாயக்காவின் அரசியல் நன்மையை மையமாக கொண்டே இருக்கும்.

ஐ. தே. க. பொதுச்சபை முடிவின்படி டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால் தொண்டமானின் ஒத்துழைப்பு ஐ. தே. கவிற்கு கிடைக்காது என்றும் டி. பி. விஜேதுங்காவிற்கு எதிராகக் கூட தொண்டமான் போட்டியிடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையினால் ஐ. தே. கவிற்குத் தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தினால் காமினியை ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் செய்ய வேண்டும் என காமினி ஆதரவான அமைச்சர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்புகின்றனர். இது தொடர்பாக பெரிய அளவு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராக திருமதி ஹேமா பிரேமதாசா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இதன் தலைவராக இருந்ததாகவும் இவரின் மறைவை அடுத்து இப்பதவிக்கு ஆர். கே. பியதாசா நியமனம் செய்யப்பட்டிருந்ததாகவும் தற்போது அவர் தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து இவ்வெற்றிடத்தை நிரப்பும் நோக்குடன் திருமதி ஹேமா பிரேமதாசாவின் நியமனம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## ஹேமா கேட்டால் இராஜினாமா

ஹேமாபிரேமதாசா வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே தமது பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக தேசியப் பட்டியல் உறுப்பினர் காலிங்க ஒபேவன்ச தெரிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு

இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த யுத்தக் குற்றங்களை விசாரிக்க ஒரு விசாரணைக்குழுவை நியமிக்க அமெரிக்க ஜனாதிபதி இந்தியா மீது தனது செல்வாக்கை பிரயோகிக்க வேண்டும்.

புலிகள் மீதான தடையை இந்திய அரசு விலக்க அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்த வேண்டும்.

சமாதானத்தின் இறுதி சந்தர்ப்பமாக இந்திய தலையீடு இல்லாத சர்வதேச சமரச முயற்சிக்கு அமெரிக்க ஜனாதிபதி முயற்சிக்க வேண்டும். அதனை இந்தியாவும் ஏற்க வேண்டும்.

இந்திய அரசு சிறிலங்கா படைகளுக்கும் ஏனைய கூலிப் படைகளுக்கும் பயிற்சி கொடுப்பதை நிறுத்த கிளின்டன் தனது செல்வாக்கை பயன் படுத்த வேண்டும் என இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் திருகோணமலை பொலிசாரினால் கைப்பற்றப்பட்ட கைக்குண்டுகள் சில கொழும்பு கொண்டு வரப்பட்டு ஆராயப்பட்டதாகவும், இவற்றை இரகசியமான முறையில் கொழும்புக்குக் கொண்டு வர திட்டமிடப்பட்டிருந்ததாக நம்பப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

லிருந்து தெரிய வந்திருப்பதாக சி. பி. ஐ. செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

மூன்று மாடிக்கட்டடத்தின் ஒருபகுதி இடிந்து விழக் காரணமாக இருந்த இந்தக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தார்கள். 7பேர் காயமடைந்தார்கள்.


இமாம் அலி, ஹைதர் அலி என்பவர்கள் இந்த செயலில்

குற்றம் சாட்டப்பட்ட 18 பேரில் 12 பேர் காவலில் உள்ளனர் எனவும் தலைமறைவாகவுள்ளவர்களில் இமாம் அலி, ஹைதர் அலி ஆகியோர் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ளனர் எனவும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் விமானங்கள், உலங்குவானூர்திகள் இங்கேயே பழுதுபார்க்கப்படும் எனவும் இம்முயற்சி செலவினத்தைக் குறைக்கும் எனவும் அவர் கூறினார்.

## கண்ணீர் அஞ்சலி



உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட

### திரு. சிவகுருநாதன் - பாலேந்திரன்

(முன்னாள் முகாமையாளர் பசுஞ்சோலை யாழ்நகர்)

அவர்கள் அமரத்துவம் எய்தியதையிட்டு அன்னாரின் இழப்பால் துயருறும் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

9-6-94 காலை 10.00 மணியளவில் நடைபெறும் அன்னாரது இறுதிக் கிரியைகளை முன்னிட்டு சுவையருவி - பசுஞ்சோலை நிறுவனங்கள் இன்று மூடப்பட்டிருக்கும்.

சுவையருவி—பசுஞ்சோலை
நிர்வாகமும், ஊழியர்களும்.

(சி-9625)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி ஜமுனா (சுமி) கனகசுந்தரம்

(யாழ்/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
உயர்தர வகுப்பு மாணவி)

செல்வி ஜமுனா கனகசுந்தரம் 7-6-94-ல் அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம், நாகேஸ்வரியின் செல்வப்புதல்வியும், ராஜன் (சவுதி), பாபு, ஜெயந்தா (டென்மார்க்), விஜிதா (டென்மார்க்), ரபீனா, முகுந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பகவதியின் பெறாமகளும், குளோரி, கிருஷ்ணன் வக்சலா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக 9-6-94 இன்று கண்ணாடிபிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்

**கிருஷ்ணன்**
(மைத்துனர்)

''யோய் கொட்''
கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி. (8508)

### முத்துக்குமாரு பரமேஸ்வரராஜா

(உடையார்)

[முன்னாள் புகையிரதப் பகுதி ஊழியர், பளை]

சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் கொண்ட திருவாளர் M. பரமேஸ்வரராஜா 7-6-94இல் சிவபதம் அடைந்துள்ளார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அருந்தவம் (விவசாயக் கல்லூரி வவுனியா), குமார் (வன்னி), யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-6-94 இன்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று அன்னாரின் இல்லத்திலிருந்து பூதவுடல் திருவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

**பரமேஸ்வரி**
(மனைவி)

தேரியந்தோட்டம்,
சுழிபுரம். (8515)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.